REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 21உ சனி (4—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 22உ ஞாயிறு (5—6—55) [இதழ் 303

டில்லியில் 'சாணக்கியபுரி': 300 அறைகள் கொண்ட விடுதி

புதுடில்லியின் தெற்குப் பகுதியில் புதிதாக உருவாகிவரும் 'சாணக்கியபுரி' எனும் நகரில், நவீன கால முறைப்படி எல்லா வசதிகளுடனும் கட்டப்படவிருக்கும் 300 அறைகள் கொண்ட ஓட்டல் ஒன்றிற்காகும் செலவிற்கு இந்திய அரசாங்கமும் பணம் தரும் என்றும், கட்டிடத்திற்குத் தேவையான நிலத்தை ஒரு குறிப்பிட்ட விலைக்கு ஒதுக்கித்தருமென்றும், ஓட்டல் நிர்வாகத்தை அங்கத்தினர்கள் வரையறுக்கப்பட்ட 'கம்பெனி' மேற்கொள்ளும் என்றும், 'கம்பெனி'யின் மூலதனத்திற்கும் இந்திய சர்க்கார் பங்குத் தொகை தருமென்றும் தெரியவருகிறது.

இரண்டாம் 'போர் முனை' துவக்கம்!

மொழிவழி மாநிலக் கிளர்ச்சியில் புதிய கட்டம்!

ஜூன் 6-ல் ஏராளமான அகாலிதளத்தவர் ஆர்ப்பாட்டம் நடத்துவர்

அமிருதசரஸ், ஜூன் 4—

"பஞ்சாப் மொழிவழி கோரிக்கைக்காக உரிமைக் கிளர்ச்சி செய்துவரும் அகாலிதளத்தவர், வரும் ஜூன் 6-ந் தேதி யன்று லூதியானா நகரில் தங்கள் கிளர்ச்சியின் 'இரண்டாம் போர் முனை'யைத் துவக்குவர்," என்று அகாலி தள பொதுச்செயலாளர் சர்தார் உம்ராவ் சிங் அறிவித்திருக்கிறார்.

'சீக்கியர்களின் ஆறுவது குரு' என்று அழைக்கப்படும் ஸ்ரீ குரு ஹர்கோவிந்த் என்பாரின் பிறந்த நாள் விழாவன்று, சீக்கிய மதக் கோவில்களான குருத்துவாரங்களில் விசேட 'பூசை'களும், பிரார்த்தனைகளும், அகாலிதளக் கிளர்ச்சி வெற்றிபெற வேண்டுமெனக் கோரி நடத்தப்பட வேண்டுமென அகாலி தளத்தின் எல்லா கிளைகளுக்கும் தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறாராம்.

லூதியானாவில் துவங்கும் 'இரண்டாம் போர் முனை'யில் ஜூன் 6-ந் தேதி யன்று மட்டும்தான் கிளர்ச்சி நடைபெறும்.

அகாலி தளத்தின் எல்லாக் கிளைகளும் அன்று கிளர்ச்சியில் ஈடுபட வேண்டுமெனத் தாக்கீது குறிக்காவிட்டாலும், அம்மாதிரி கிளர்ச்சியிலீடுபடுவதைத் தடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஜூன் 6-ந் தேதியன்று ஏராளமான அகாலித் தொண்டர்கள், அமிருதசரஸ், லூதியானா ஆகிய இரு முனைகளிலும், 'பஞ்சாப் மொழிவழி மாநிலம் வேண்டும்' என்ற உரிமைக் குரல் எழுப்ப விதிக்கப்பட்டிருக்கும் தடையை மீறி கிளர்ச்சி செய்வர் என்றும் அகாலிதளப் பொதுச்செயலாளர் அறிவித்திருக்கிறார்.

பார்ப்பன நிலப் பிரபுக்கள்: 'சமூக விலக்கு' செய்யப்படுகின்றனர்

மேச்சேரி கிராம மக்களின் எழுச்சி

இராணிப்பேட்டை, ஜூன் 4—

வடாற்காடு மாவட்டம், மேச்சேரி கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலும் பார்ப்பனர்களான நிலப்பிரபுக்களை, அந்தக் கிராமத்தில் உள்ள இதர வகுப்பு மக்கள் 'சமூக விலக்கு' செய்திருப்பதாகத் தெரிகிறது.

நீர்ப்பாசனக் காரியங்களுக்குத் தண்ணீர், கிணற்றிலிருந்தோ, ஏரியிலிருந்தோ கிடைக்கும்போது, மகசூலில் 50 சதவிகிதமும், தண்ணீர், 'பம்பு'கள் மூலமாகப் பெறப்படும்போது மகசூலில் மூன்றில் ஒரு பாகமும் தங்கள் பங்காகத் தரப்பட வேண்டுமென அந்தக் கிராமத்தின் விவசாயிகள் கோரி வருகின்றனர் என்று தெரிகிறது.

தங்களின் இந்தக் கோரிக்கையை வலியுறுத்துவதற்காக அவர்கள், பெரும்பாலும் பார்ப்பனர்களாயிருக்கும் நிலப்பிரபுக்களை 'சமூக விலக்கு' செய்திருப்பதாக அறியப்படுகிறது.

பார்ப்பனர்களுக்கு, சலவைத் தொழிலாளர்கள், மருத்துவத் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்வோர் ஆகியோர் வேலை செய்ய மறுத்து வருவதுடன், கடைகளில் அவர்களுக்கு பொருள்கள் விற்கவும் மறுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

ஒரு போலீஸ் அதிகாரி அவ்விடத்திற்கு விரைந்து சென்றிருப்பதாகவும், ஆனாலும், எவ்வித உடன்பாடும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை என்றும் செய்தி கூறுகிறது.

மிராசுதார்கள் 'சமூக விலக்கு' செய்யப்படுகின்றனர்

திருச்சி கிராமத்தில் விவசாயிகள் நடவடிக்கை

திருச்சி, ஜூன் 3—

லால்குடியிலிருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள அரியூர் என்ற கிராமத்து மிராசுதார்கள், கிராமத்தில் உள்ள பால் வியாபாரிகள், இதர பணியாட்கள் ஆகியோரால், 'சமூக விலக்கு' செய்யப்பட்டிருப்பதால், அவதிப்படுகிறார்களாம்.

அந்தக் கிராம விவசாயிகளின் முக்கியமான கோரிக்கை எல்லாம், சென்ற ஆண்டில் ஒரு நிலம் எந்த விவசாயியால், என்ன நிபந்தனைகளுடன் விவசாயம் செய்யப்பட்டதோ, அந்த நிலம் இந்த ஆண்டும், அதே விவசாயிக்கு, அதே நிபந்தனைகளுடன் விவசாயம் செய்யத் தரப்படவேண்டும் என்பதுதான்.

இந்தக் கோரிக்கையை மிராசுதாரர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையாம்; இதன் காரணமாக விவசாயப் பொருட்களின் விலைகள் வீழ்ந்துவிட்டதாகவும், நிலைகள் மாறிவிட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதனை ஒட்டி போலீசார், சுமார் 22 பேர்கள் மீது சி. பி. சி. 107-ம் பிரிவின்படி வழக்குத் தொடர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த சம்பவத்திற்குப் பிறகே, கிராமத்திலுள்ளோர், மிராசுதார்களை 'சமூக விலக்கு'க்கு ஆளாக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ரெவினியூ இன்ஸ்பெக்டர் கிராமத்திற்கு வந்து, விவசாயிகளுக்கும்— மிராசுதார்களுக்குமிடையே சமரசம் செய்து வைக்க முயன்று வருவதாகவும் தெரியவருகிறது.

மாஸ்டர் தாராசிங் சார்பில் வாதாட முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

'தடையுத்தரவு அரசியல் சட்டத்திற்கு முரணானது' என வாதம்

சாந்திகார், ஜூன் 3—

அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங், மற்றும் பலர் மீது அமிர்தசரஸ் மாவட்ட நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளை, அந்த நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று பஞ்சாப் உயர் நீதிமன்றத்தில் மாஸ்டர் தாராசிங் சார்பில் தரப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான இக்பால் அகமத், மாஸ்டர் தாராசிங் சார்பில் வழக்காடுகிறார். வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றவேண்டுமென்று கோருவதற்கு இரண்டு காரணங்களை அவர் கூறியிருக்கிறார்— ஒன்று, பஞ்சாப் மந்திரி சபை, மகா பஞ்சாப் மாநில அமைப்பை ஆதரித்திருப்பதால், அதன் கீழ் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு நியாயமான விசாரணையை எதிர்பார்க்க முடியாது; இரண்டாவதாக, இந்த வழக்கில் மிக முக்கியமானதோர் சட்டப் பிரச்சினை உள்ளடங்கியிருக்கிறது— என்பனவையே அக்காரணங்கள்.

"அமிருதசரஸ் நீதிபதி, பஞ்சாப் மொழிவழி மாநிலம் கோரி எழுப்பும் உரிமைக் குரலை, 144 தடையுத்தரவின் மூலம் தடுத்திருப்பது, அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் உரிமைகளைப் பறிப்பதாயிருக்கிறது"

என்றும் இக்பால் அகமது சுட்டிக் காட்டியிருக்கிறார்.

'சாதி இந்து'க்களை 'சமூக விலக்கு' செய்யும் தாழ்த்தப்பட்ட மக்கள்!

கரூர் வட்ட கிராமத்தில் சம்பவம்

திருச்சி, ஜூன் 4—

நிலப்பிரபுக்களுக்கும் தங்களுக்கும் ஏற்பட்ட தகராறு ஒன்றைத் தொடர்ந்து, கரூர் வட்ட மகாதானபுரம் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பினர், இதர சாதி இந்துக்களெனப் படுவோரை 'சமூக விலக்கு' செய்திருப்பதாகத் தெரிகிறது.

அவர்கள், சாதி இந்துக்களெனப் படுவோருக்கு எவ்வித ஊழியமும் செய்ய மறுத்து வருகின்றனர் என்று தெரிகிறது.

கடந்த மகசூல் காலத்தில், வேறு பலர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தாலுங்கூட, தாங்கள்தான் கதிர் அறுவடையில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டுமென அவர்கள் வற்புறுத்தினர் எனத் தெரிகிறது.

மாவட்ட அதிகாரி செய்து வைத்த சமரசத்தின்பேரில் அவர்கள், பழைய நிலையை குலைக்காதிருக்கச் சம்மதித்திருந்தனர் என்றும், ஆனால் இப்போது, தாங்கள் மட்டுமே நிலச் சாகுபடியில் ஈடுபட அனுமதிக்கப்பட வேண்டுமென வற்புறுத்துவதாயும் கூறப்படுகிறது.

எட்டுக் குழந்தைகள்-மனைவியுடன் பட்டினிப் போர்!

ஓய்வுபெற்ற போலீசார் ஈடுபடுவார்?

6 ஆண்டுகளாக உபகாரச் சம்பளம் தரப்படவில்லையாம்

பீஜப்பூர், ஜூன் 4—

ஓய்வுபெற்றுள்ள ஒரு சிறைப் போலீஸ்காரர் தனக்கு உபகாரச் சம்பளம் தரப்படாமலிருப்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக தானும், தன் மனைவி, எட்டு குழந்தைகளுடனும் பட்டினிப் போரில் ஈடுபடப் போவதாக அச்சுறுத்தியிருக்கிறார் எனத் தெரிகிறது.

1949-ல், தான் ஓய்வு பெற்றதாகவும், இன்னும் தனது உபகாரச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுத் தரப்படவில்லை என்றும் அந்த போலீஸ்காரர், கர்நாடக பிரதேச அரிசன சேவா சங்கத் தலைவரிடம் புகார் செய்துள்ளதாயும், அதன் பேரில் பூனாவில் உள்ள சிறை இலாகா அதிகாரிக்கு, போலீஸ்காரரின் குடும்பம் பட்டினியால் தவிப்பதாக தந்தி மூலம் தெரிவித்திருப்பதாயும் கூறப்படுகிறது.

3,000 தொழிலாளர் வேலையிழப்பர்?

கோலாப்பூர், ஜூன் 4—

90 விசைத்தறித் தொழிற்சாலைகளில் பணி புரியும் சுமார் 3,000 பேர், ஜூலை 1-ந் தேதி முதல் வேலையிழப்பர் என்று அச்சுறுத்தப்படுவதாகத் தெரிகிறது.

சுமார் 1,827 தறிகள் ஓடும் அந்தத் தொழிற்சாலைகளின் நிர்வாகிகள், புதியதாக விதிக்கப்படும் சுங்க வரி கட்டுவது தங்களுக்கு மிகவும் கடினமானதாக இருப்பதாகவும், ஆகவே தொழிற்சாலைகளை மூடிவிடப்போவதாகவும், அதை ஒட்டி தொழிலாளர்களுக்கு ஒருமாத 'நோட்டீஸ்' கொடுக்கப்பட்டிருப்பதாயும் தெரிய வருகிறது.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 4—6—'55 சனி

கடலுடன் கலக்கும் கண்ணீர்த் துளிகள்!

★

" அடுத்த சில ஆண்டுகளில் இங்குள்ள தென்னாட்டவரின் தொகை, இலங்கை மக்கள் தொகையைவிட அதிகரித்துவிடும்."

" இந்த உபத்திரவமான நிலைமையைச் சமாளிக்க, பிரதம மந்திரி, மக்கள் சபையைக் கலைத்துவிட்டு, இந்த நாட்டின் ஏக சர்வாதிகாரியாக வேண்டும்."

" அத்துடன், இந்த நாட்டுக்கு விசுவாசமற்றவர்களைச் சிறையில் தள்ளிவிட்டு இங்குள்ள தென்னாட்டுத் தோட்டத் தொழிலாளரிடம் இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டு அச்சுறுத்தி வேலை வாங்க வேண்டும். வேலை செய்ய மறுப்போரைத் துரத்திவிட வேண்டும்."

—இது, இலங்கைவாழ் திராவிடர் பற்றி, இலங்கை திரிசிங்கள இயக்கத்தின் ' முழக்கம் '!

" வர்த்தக நிறுவனங்களில் ரூ. 500-க்கும் குறைவாக சம்பளம் பெறும் ஊழியர்களில் 75 சதவிகிதத்தினரும், ரூ. 500-க்கும் அதிகமாக சம்பளம் பெறுவோரில் 50-சத விகிதத்தினரும் சிங்களவர்களாகவே இருந்தால் தான், வர்த்தகம் நடத்த அனுமதி தரப்படும்."

என்பது, இலங்கை சர்க்கார் உத்தரவு.

" இலங்கை இந்தியருக்கு குடிஉரிமை வழங்கும் விஷயம் பொருளாதாரப் பிரச்சினையுடன் தொடர்புடையது. பெருகிக் கொண்டேயிருக்கும் மக்கள் தொகைக்கு வேலை கண்டு பிடிப்பது சிரமமாகிறது "

—இது,பிரதமர் கொத்தலாவலை, கூட்டமொன்றில் பேசிய போது வெளியிட்ட கருத்து.

"அழுகுரல் கேட்டு அமைதி இழந்தோம்! படும் கொடுமைகள் உணர்ந்தோம்! பிரச்சினையை அறிந்தோம்—பரிகாரமும் புரிந்துகொண்டோம்! இதோ, டெல்லியில் கூடினோம்-பேசினோம் ; திட்டம் வகுத்தோம்; ஒப்பந்தம் செய்து கொண்டோம்; அமுல் செய்வோம்; உங்கள் அல்லல் அகலும்—அவதி குறையும்—அமைதி பெறுவீர்"

என்று, டில்லி ஒப்பந்தத்தை மாமருந்தாக தம்பட்டமடித்துக் கொண்ட இந்தியப் பேரரசு, இப்போது, ' ஒப்பந்தத்தை இலங்கை தவறாக வியாக்கியானம் செய்கிறது; சரிவர அமுல் செய்ய முன்வர மறுக்கிறது!' என்று அழுகுரல் எழுப்பிக் கிடக்கிறது.

" ஏன் பிறந்தோம் இப்புவியில், ' ஏழை! ஏதுமில்லாதவன்! வாழ்வுக்காக ஏங்கித் தவித்தேன்—பிறந்த மண்ணில்! 'ஏறு, கப்பலில்! உனக்கு அங்கே வாழ்வு ' என்றனர்! வந்தேன்—கண்ணீரும் கம்பலையுமாக! 'பொழுது சாயாதா?கங்காணியின் ஓங்காரக் கூச்சல் ஓயாதா ?' என்ற ஏக்கத்தோடு ஓயாது உழைத்தேன்! உயர்த்தினேன் இலங்கையை—இன்றைய வளமான நிலைக்கு! ஆனால், இன்று, ' நாடு கடத்தத் திட்டமிடும் நயவஞ்சகரின் கொடுமை மாயாதா? எங்களின் துயர் கண்டு துடிக்காத டில்லிக்கு எதிராக தென்னாட்டவரின் உள்ளத்தில் உரிமைத் தாகம் பாயாதா?'—என்ற உள்ளக் குமுறலால் இலங்கை வாழ் திராவிடர் உதிர்க்கும் கண்ணீர்த் துளிகள் கடலில் கலந்தவண்ணமுள்ளது.

சிங்களவரும், அவர்களது சர்க்காரும், சர்க்காரை நடத்தும் பிரதம மந்திரியும், இலங்கையில், திராவிடர்கள் தொடர்ந்து வாழ்வதைக் கிஞ்சிற்றும் விரும்பவில்லை என்பதை நாளுக்குநாள் தெளிவாகக் கூறிவருகின்றனர்—சொற்களால் மட்டுமல்ல - தீவிரமான செயல்களால்!

' ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டாலேபோதும்,' என்றெண்ணிவிட்ட டெல்லி, " இலங்கைத் திராவிடரின் இன்னல்களுக்கு பரிகாரம் தேடுவதில், எனக்கு ஏன் அக்கரை? யாரோ படும் அவதிக்கு நான் ஏன் மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டும்? இதுதானா எனக்கு வேலை? அழைப்புகள் வந்த வண்ணமுள்ளன — ' வாருங்கள் ரஷ்யாவிற்கு! பாருங்கள் யூகோவை!' -என்று! அவற்றை கவனிக்கவே எனக்கு நேரமில்லாதபோது, இந்தப் பிரச்சினைகளை எப்படிக் கவனிக்க முடியும் ?"—என்ற ' பெரும் போக்கி'ல் சென்று கொண்டிருக்கிறது—' கேட்பவர் யாரிருக்கிறார்கள் ?'—என்ற ' அசட்டு' எண்ணத்தில்!

' இலங்கை இந்தியருக்குப் பாடுபடவே எங்கள் கட்சி!'- என்று கூறிக்கொண்டிருக்கும் எண்ணற்ற கட்சிகள் இலங்கையில் உண்டு; ஆனாலும், ' அவை எல்லாம் கூறும் திட்டங்கள் இலங்கைவாழ் திராவிடரின் எதிர்காலத்தை நிர்ணயித்து, உறுதியான வாழ்வு தரத்தக்கன என்ற எண்ணத்தையும், நம்பிக்கையையும் இலங்கை திராவிடருக்கு ஊட்டத் தவறிவிட்டன,' என்று கூறப்படுவதை, நாம்: ' ஆதாரமற்றது ' எனக் கொள்ள முடியவில்லை.

" இந்த நெருக்கடியான நிலையில்லா நிலையில்தான் நாங்கள் தவிக்க வேண்டுமா ?"—என்று எங்கும்போதெல்லாம், இலங்கைக் கடலின் கரிப்பு அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது—திராவிடர் சிந்தும் கண்ணீர்த் துளிகள் கடலில் கலந்து கொண்டே இருப்பதால்!

சென்னை நகர வாக்காளர் தொகை

ஏழு ஆண்டுகளில் இரண்டு மடங்காகியுள்ளது

சென்னை, ஜூன் 2—

சட்டசபைக்கும் மக்கள் சபைக்குமான சென்னை நகர வாக்காளர் தொகை, கடந்த 7 ஆண்டுகளில் இரண்டு மடங்காக உயர்ந்திருப்பதாக, நகர சபையினர் தயாரித்துள்ள திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து தெரிய வருகிறது.

வயது வந்தோர் எல்லோருக்கும் வாக்குரிமை தரப்பட்டபோது 1918-ல் 5,75,000 - ஆக இருந்த வாக்காளர்எண்ணிக்கை இப்போது 9,50,000 ஆக உயர்ந்துள்ளது சென்னை நகரில் சுமார் 15,00,000- மக்கள் வாழ்வதாகவும் கணக்கிடப் பட்டிருக்கிறது.

இந்த வாக்காளர் பட்டியல். ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலுமாக, தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்பட்ட 100 - பெண்கள் உட்பட 500 குமஸ்தாக்களால் கடந்த இரண்டுமாதங்களில் தயாரிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

1948-ம் ஆண்டு தயாரிக்கப் பட்ட வாக்காளர் பட்டியல், மற்றும் ஆண்டு தோறும் சேர்த்துக் கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் ஆகியவற்றை திருத்தங்களுடன் ஒன்று சேர்த்து, புதுபட்டியல் தயாரிப்பதற்காக சுமார் 75,000 ரூபாய் செலவானதாகவும் கூறப்படுகிறது.

சமுதாய நலத் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய பரவல் திட்டம்—ஆகிய திட்டங்களின் கீழ் 1954 செப்டம்பர் வரை, மொத்தம் 1,014 மைல் கெட்டித் தள பாதைகளும், 11,665 மைல் சாதாரண பாதைகளும் அமைக்கப்பட்டன ; அதே காலத்தில், இத்திட்டங்களின் கீழ், சாலைகள், கைத்தொழில்கள் அபிவிருத்திக்காக 152 உற்பத்தி - பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப் பட்டன.

'வட நாடு வேறு—தென்னாடு வேறு'

' இரு வேறு பண்பாடு கொண்ட மக்களுக்கு ஒரே தேசீய மொழி ஏன் ?'

மாவ்லங்கருக்கு 'தமிழ் நாடு' இதழ் தரும் அறிவுரை

" தனிப்பட ஆட்சி நடத்த, தன் கலை, பண்பாடு, மொழி அனைத்திலும் தனி உயர்வுகண்ட தென்னாட்டார்—அதிலும், சிறப்பாகத் தமிழர்—தம் மொழியினின்றும் முற்றிலும் வேறுபட்ட மொழியான இந்தியைத் தம்மீது திணிப்பதை எவ்வாறு ஏற்கமுடியும் ?

" தனிப்பட்ட இனமாக இயங்கும் ஒரு பெருந் தொகையினர், தம் மொழிக்குச் சிறிதும் இயைபில்லாத ஒரு மொழியைக் கற்றுத் தானாக வேண்டுமென்று அவர்கள் விருப்பத்திற்கு மாருகத் திணிப்பது, மக்களாட்சிக் கொள்கைக்கு முரணானது. அம்மொழியை கற்பதால் தமக்கோ, தம் பண்பாட்டிற்கோ, மொழிக்கோ தீங்கு நேரும் என்று ஒரு சாரார் சிந்தித்தால், அதற்கு சிறிதேனும் அரசாங்கத்தார் மதிப்புக் கொடுப்பதுதான் மக்களாட்சி முறையாகும் ;

" ஒரே ஆட்சிக்குட்பட்ட நாட்டில், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாயிருப்பது உலகத்திற்குப் புதிதல்ல. வடக்கும் தெற்கும் வெவ்வேறு பண்பாடும், தனிப்பட்ட நாகரிகமும், மொழியும் கொண்டிருப்பதால், ஒரே தேசீய மொழியைப் புகுத்துவதில் விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமென்று சேலம் நகரசபையார் கூறியதில் தவறென்ன இருக்கிறது ?

" 'மொழிப் பாகுபாடு செய்யத் தென்னாட்டவர் முனைந்தால், டில்லியிலுள்ள தென்னாட்டவர் நிலையென்னவது '—என்ற ஒரு அச்சுறுத்தலை மாவ்லங்கர் வெளியிட்டிருக்கிறார். பொறுப்பும் தகுதியுமுடைய ஒரு அரசியல் தலைவரிடமிருந்து இவ்வித அச்சுறுத்தலை யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. 'இந்தியைத் திணிப்பதைத் தென்னாட்டார் ஏற்றுக்கொள்ளாவிடில், டில்லியில் அவர்கட்குப் பதவி கிடைக்கமாட்டா'தென்பது அவருடைய பேச்சின் பொருளா ?

" அப்படியானால், அவர் சிந்தனைக்கு ஒன்று கூற விரும்புகிறோம்—தென்னாட்டார், தம் திறமையாலேயே கடல் கடந்தும், வெளியிடங்கள் சென்றும், நாடாண்டும், பொருளீட்டியும், அறமுரைத்தும் வெற்றி கண்டவர்கள்; எங்கு சென்றாலும், அவர்கள் திறமைக்கும், உழைப்புக்கும், அறிவுக்கும் வரவேற்பு உண்டு;' எனவே, கொள்கையை விட்டு, தன் மொழியையும் குலைத்து, பதவியையும் நிலைநிறுத்திக்கொள்ள அவர்கள் ஆசைப்பட மாட்டார்கள் ; ஆதலால், மாவ்லங்கர் கூறிய இவ்வித அச்சுறுத்தல்களுக்கு அவர்கள் அஞ்சி அடிபணிந்துவிடமாட்டார்கள் என்பதைக் காலம் மெய்ப்பிக்கும்."

—இவ்வாறு, 2—6—55 ' தமிழ நாடு ' இதழ், தன்னுடைய உபதலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :—

"இந்தி மொழி, இந்தியாவில் பெரும்பான்மையோரால் பேசப்படுவதாலேயே தேசீய மொழியாகத் தெரிந்தெடுக்கப்பட்டதென்றும், ஆங்கிலத்தையோ வேறெந்த அந்நிய மொழிகளையோ தேசீய மொழியாக்குவது முடியாததாதலின் இந்தியைத் தென்னாட்டார் எதிர்ப்பது தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்வதுபோலாகுமென்றும் இந்தியப் பாராளுமன்றத் தலைவர் திரு. மாவ்லங்கர், சேலம் நகரசபை வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

"வடநாட்டிலேயே,இந்திமொழி, பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு மாதிரியாகப் பேசப்பட்டு வருகிறது. அம்மொழியில் சொல்வளமோ, இலக்கிய வளமோ மிகுதியாக இல்லை என்பதைப் பலரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

"தென்னாட்டினரைப்பொறுத்தவரை, அம்மொழிக்கும், அம்மொழி பேசுவோரின் நடையுடை, பண்பாடு இவற்றிற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு; எனவே, அவர்களுக்கு, ஆங்கிலம்போல் இந்தி மொழியும் ஒரு அந்நிய மொழி தான்.

"இந்தி, பெரும்பான்மையரால் பேசப்படும் மொழி என்பது உண்மையானாலும், பரந்த பெருந்தலமான தென்னாட்டில் எந்தப் பகுதியிலும், யாருக்கும்—இந்தியோ அல்லது அதன் தொடர்புள்ள வேறு மொழிகளோ—பிரதேச மொழியாகவோ, தாய் மொழியாகவோ இல்லை.

'தென்னாட்டு மொழிகள் அனைத்துமே தனித்த அடிப்படை உடையனவாயும், இந்தி மொழியினின்றும் வேறுபட்ட பண்பினவாயுமிருப்பதால்தான், இந்தி மொழியைத் தென்னாட்டார் ஏற்க முடியாமலிருக்கிறார்கள்."

ஆச்சாரியாருக்கு சென்னை சர்க்கார் சூடு!

'பி. சி. ஜி. ஊசி தீமையற்றதே' என அறிக்கை

சென்னை, ஜூன் 2—

' க்ஷயரோகத் தடுப்புக்காக பி. சி. ஜி. ஊசி போடுவது ஆபத்தானது,' என்ற கருத்துப்பட சிலர் பேசி வருவதற்கு மறுப்புத் தரும் வகையில் சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனர். அது கூறுவதாவது :—

" இந்த ஊசி போடுவது பற்றி அண்மையில் வெளியான நூல்களைக் கவனமாக ஆராய்ந்ததும், வைத்தியத் தொழில் நிபுணர்களின் தெளிவான கருத்தும், இந்த ஊசி போடும் இயக்கம் விவேகமானது தான் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி கூறுகின்றன ;

" காச நோயால் பீடிக்கப்பட்டுள்ள ஒருவரிடமிருந்து க்ஷயக்கிருமிகள் பிறருக்குத் தொற்றிக் கொண்டால் நோய் அதிகமாகி, ஏராளமானவர்களின் உயிருக்கு உலை வைப்பதா யிருக்கிறது ; நோய் பிடித்தவர் மூலம் பிறருக்கு நோய் தொத்துவதைத் தடுத்தாக வேண்டும் ; எனவே, பி. சி. ஜி. ஊசி போட்டுக் கொள்வதின் மூலம், தடுப்புச் சக்தியை மக்கள் பெற முடிகிறது ;

" உயிர்க் கிருமிகள் உள்ள பி சி. ஜி. ஊசி போடுவதால், ஆபத்து ஏதுமில்லை என்றே, ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட பரிசோதனைகளின் முடிவுகள் கூறுகின்றன ;

" 1951—53-ம் ஆண்டுகளில், உலக சுகாதார நிறுவனத்தால், ஐரோப்பா எங்கணும் சுமார் 160 லட்சம் பேருக்கு இந்த ஊசி போடப்பட்டது ; எவருக்கும் பிரதிகூலமான பலன் கூட ஏற்படவில்லை ;

" இந்தியாவில், 1949-ல் இந்த ஊசி போடும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை சுமார் 1,67,25,175 பேருக்கு இந்த ஊசி போடப்பட்டுள்ளது. இதுவரை எவருக்கும், கெடுதல் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை."

வேறு பல ஆதாரங்களின் மூலமும், நிபுணர் கருத்துக்களின் மேற்கோள் மூலமும், சென்னை சர்க்கார், பி. சி. ஜி போடுவதில் ஆபத்தேதுமில்லை,' என்று தெரிவித்திருக்கின்றனர்.

மின்சார இரயில்வே பெட்டிகள்

இந்தியாவிலேயே உற்பத்தி

மின்சார இரயில்வேக்கான பெட்டிகள், இனி இந்தியாவிலேயே தயாரிக்கப்படுமெனத் தெரிகிறது. 1957-ம் ஆண்டிறுதிக்குள், 100 மின்சார இரயில்பெட்டிகளைத் தயாரித்துத் தருமாறு, கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனிக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

இந்தியாவில் ஒலிபரப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கான ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், இவ்வாண்டில் இதுவரை மூன்று புதிய ரேடியோ நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன ; சமீபத்தில் திறக்கப்பட்ட மூன்றாவது நிலையம் இந்தூரில் இருக்கிறது.

கன்னக்கோல் கள்வனின் கைவரிசை !

கன்னக்கோல் கள்வனொருவன் பம்பாய் போலீஸ் சி. ஐ. டி. இலாகா துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் வீட்டில் புகுந்து, ரூ. 15,000 பெறுமானமுள்ள நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டானும் !

எல்லா 'கிரேடு' ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வு கிடைக்கும்?

ரூ. 18 கோடியில் சென்னை சர்க்கார் திட்டம்

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 8,000 ஆரம்பப் பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்படுமா?

சென்னை மாநிலத்தில், கல்வி அபிவிருத்திக்காக சுமார் ரூ. 78 கோடி செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக, இது இந்திய சர்க்காருக்கு அனுப்பப்படும்.

சென்னை மாநிலத்திற்குக் கல்விக்காக ரூ. 88 கோடி ஒதுக்கப்படும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை, நாடு முழுதுவதற்கும் ஒதுக்கப்படும் கல்வித் தொகையில் பத்தில் ஒரு பங்கு ஆகும்.

ஆரம்பப்பள்ளிகள், ஆதாரப்பள்ளிகள், இடைநிலைப்பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்த எல்லா கிரேடு ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வு தருவதற்காக ரூ. 17.92 கோடி இந்தத் திட்டத்தில் அடங்கியுள்ளது; 'பி. டி.'களுக்கும் சம்பள உயர்வு உண்டு.

6 முதல், 17 வயது வரையுள்ள குழந்தைகளை மேலும் 50 சதவிகிதம்வரை பள்ளிகளில் சேர்த்து கல்வி வசதி அளிப்பதற்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது இதற்குத் தேவைப்படும் 57,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்; கைத் தொழில் போதனை ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படும்; மற்றும் பள்ளிக்கூடங்களில் இட வசதி விஸ்தரிக்கப்படும்; சாப்பாடு இலவசமாக அளிக்கப்படும்; இதற்கெல்லாம் ரூ. 61·5 கோடி செலவாகும்.

11 முதல், 14 வயதுவரை உள்ள குழந்தைகளில் 30 சதவிகிதம் பேருக்காவது ஆதாரக் கல்விப் பயிற்சி அளிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; 8,000 ஆரம்பப்பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; 80 போதனை பயிற்சிப் பள்ளிகள், ஆதாரக் கல்வி போதனை பயிற்சிப் பள்ளிகளாக மாற்றப்படும்; இதற்கெல்லாம் ரூ 4 கோடி ஆகும்.

மேலும் 30 சதவிகித மாணவர்களுக்கு செகண்டரி கல்வி வசதி அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்—அதாவது, ஆண்டிற்கு 540 'பி. டி.'களும், 200 உடற்பயிற்சி ஆசிரியர்களும் தேவை. இதற்கு மேலும் 5 போதனை பயிற்சி கல்லூரிகளும், ஒரு தேகப் பயிற்சி போதனை கல்லூரியும் தேவை. பல நோக்குள்ள பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்; சம்பளத்தை உயர்த்த வேண்டும்; இதற்கெல்லாம் ரூ. 9·3 கோடி செலவாகும்.

மற்றும், நூல் நிலையம், இளைஞர் முகாம்கள், தனிப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு உதவி, சமூகக் கல்வி, சமூகக் கல்வி போதனை ஆசிரியர்கள் பயிற்சி, குழந்தைகளுக்குப் புத்தகம் தயாரித்தல், குருடு - செவிட்டுக் குழந்தைகளுக்குக் கல்வி போதித்தல் ஆகியவற்றிற்கு ரூ. 3·25 கோடி செலவாகும்.

சர்வ கலாசாலைப் படிப்பு, தொழில் நுட்பக் கல்வி சம்பந்தமான திட்டங்கள்—சர்வ கலாசாலை அதிகாரிகள் மேற்பார்வையில் தனியாகத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

எல்லா கிரேடுகளையும் சேர்ந்த உபாத்தியாயர்களுக்குச் சம்பள உயர்வு தர மொத்தம் ரூ. 17.92 - கோடி செலவாகும். சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற கல்வி காரியதரிசிகள், கல்வி டைரக்டர்களின் மகாநாட்டில் சிபாரிசு செய்யப்பட்ட குறைந்தபட்ச சம்பளவிகிதத்தை மனதிற்கொண்டே இந்தச் செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 60; செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 75.

பாக். — ஆப்கன் தகராறு

சமரசம் செய்து வைக்க 5 நாடுகளின் குழு முயற்சி

ஆப்கனுக்கும் — பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டுள்ள தகராறுகளை சமரசமாகத் தீர்த்து வைக்க ஈரான் எகிப்து, ஈராக், துருக்கி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றுகூடி முயற்சிக்கும் என்று தெரியவருகிறது.

வேலையற்றோர் எண்ணிக்கை அதிகமாகிறது!

புள்ளி விவரம் தரும் குறிப்பு

இவ்வாண்டு ஏப்ரல் இறுதிவரை இந்தியாவிலுள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த வேலையில்லாதோரின் எண்ணிக்கை சுமார் 6,00,000 ஆகும்; இது, அதற்கு முந்திய மாத இறுதியில் இருந்த எண்ணிக்கையைவிட, 10,600 அதிகமாகும்.

அந்த மாதத்தில், வேலை தேடித் தரும் நிறுவனங்களில் புதிதாகப் பதிவு செய்து கொண்ட வேலையில்லாதோரின் எண்ணிக்கை 1,25,141 ஆக இருந்தது. இது, அதற்கு முந்திய மாதத்தின் எண்ணிக்கையைவிட 5,000 அதிகமாகும். பரீட்சைகளுக்குப் பிறகு மாணவர்கள், அதிகக் கணக்கில் வேலைக்கு அமர உதவி நாடியது, பதிவு எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறதாகத் தெரிய வருகிறது.

பரிசீலனை மாதத்தில், வேலை தேடித் தரும் நிறுவனத்துக்கு தகவல் அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை 23,522-ஆக இருந்தது — வேலைக்காக 75,375 பேர்கள் மனுச் செய்து கொண்டதில், 13,962 பேர்களுக்கு வேலை கிடைத்தது.

பச்சை நிறமும், 'வாடை'யும் கொண்ட அமெரிக்க நெய்

பழக்கப்படுத்திக்கொள்ள பல நாளாகுமாம்!

சென்னை, ஜூன் 2—

தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்ட அமெரிக்க நெய், நல்ல நெய்யாக இருந்த போதிலும், அதன்நிறமும் வாசனையும் மக்கள் உபயோகிக்கப் பழகிக் கொள்வதற்கு நீண்ட நாளாகும் என்று கூறப்படுகிறது.

உள்நாட்டு நெய் போன்றன்றி, ஏதோ ஒருவகை வாடை அடிப்பதாகவும், பச்சை நிறமுடையதாயிருப்பதாகவும் தெரிய வருகிறது.

சென்ற மாதம் வந்த 1,100 டன் நெய்யில் 800 டன் பல நிறுவனங்களுக்குத் தரப்பட்டது என்றும், மைலாப்பூர் 'ஆர்ச் பிஷப் 'பால்' இது அனுப்பி வைக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

பல பள்ளிகளில் உணவுத் தயாரிப்புக்கு இந்த நெய் பயன்படுத்தப்பட்டதாயும், இந்நெய்யினால் தயாராகும் பண்டங்களை பிள்ளைகள் விரும்பினாலுங்கூட அவற்றை பழக்கப்படுத்திக்கொள்ள இன்னும் பல காலமாகும் என்றும் கூறப்படுகிறது.

52 பேருக்கு தூக்கு; 450 பேருக்கு சிறை!

சீனுவுக்கு எதிராகக் கலகம் செய்ய இரகசிய நிறுவனம்

கம்யூனிஸ்டு ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்யச் சதி செய்ததாகவும், நாச வேலைகளைக் கையாண்டதாகவும் சீனுவின் வடமேற்கு மாகாணமாகிய ஹெனன்னில் 52 பேருக்கு தூக்குத் தண்டனையும், 450 பேர்களுக்கு பல்வேறு சிறைத் தண்டனைகளையும் சீன சர்க்கார் விதித்துள்ளதாம்; தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டனவாம்.

அவர்களுடைய தலைவர்களில் 300-க்கு மேற்பட்டவர்கள், சியாங்-கே - ஷேக்கின் ஏஜெண்டுகள் என்றும், அவர்களில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் கூறப்படுகிறது.

"கம்யூனிஸ்டு எதிர்ப்பு இராணுவத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் 219 பேரில் 4 பேருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது; 22 - பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, தண்டனையை நிறைவேற்றுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது; 150 பேருக்கு பல்வேறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது" இவ்வாறெல்லாம் செய்திகள் கூறுகின்றன.

கம்யூனிஸ்டு எதிர்ப்புப் புரட்சி நிறுவனத்தின் தலைவர்கள் 11 - பேருக்கு மரண தண்டனையும், அந்த நிறுவனத்தைச் சேர்ந்த படையின் இரு தலைவர்கள்மீது சதி செய்ததாகக் குற்றமும் சாட்டப்பட்டிருக்கின்றன; அவர்கள் சியாங்கின் ஏஜெண்டுகளெனக் கருதப்படுகின்றனர்.

100 இடங்களில் இரகசிய அறைகளில் வசித்துக்கொண்டிருந்த அந்த நிறுவனங்களின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்; ஏராளமான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் சியாங் சர்க்கார் கொடிகளும் கைப்பற்றப்பட்டுள்ளனவாம்.

எகிப்தில் எண்ணெய் சுத்திகரிப்பு சாலை

செய்ரோவுக்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு சாலை ஒன்றிற்கான கால்கோள் விழாவை எகிப்திய பிரதமர் கர்னல் அப்டெல் நாசர், நடத்திவைத்ததாகத் தெரிகிறது.

இதற்கு 30,75,000 பவுன் (சுமார் 4 கோடி ரூபாய்) செலவாகுமாம்.

இத்தாலிய கம்பெனி ஒன்றினால் கட்டப்படும் இந்த சுத்திகரிப்பு சாலையில் சூயஸிலிருந்து பாதாளக் குழாய் மூலம் கொண்டுவரப்படும் 23,00,000 டன் எண்ணெய் சுத்திகரிப்பு செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

தேங்கியுள்ள கைத்தறித் துணிகள்

விற்பனை செய்ய 'உண்டி'கள்

சென்னை, ஜூன் 2—

சென்னை மாநிலத்தில் தேங்கிக் கிடக்கும் சுமார் 50 லட்சம் ரூபாய் பெறுமான கைத்தறி துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு, சுமார் 30 லட்சம் ரூபாய்க்கு, அண்மையில் கைத்தறி 'உண்டி'கள் வெளிக்கொணரப்படும் என்று தெரியவருகிறது.

உண்டிகள்—ரூ. 50, 25, 10, 5 என்ற பிரிவுகளில், 10 சதவிகிதம் தள்ளுபடியுடன் தரப்படும் என்றும், ஒருவருடம் வரையில் அவை மதிப்புடையனவாயிருக்கும் என்றும் தெரியவருகிறது.

இம்மாதிரி உண்டிகள் வெளியிட வேண்டுமென முதன் மந்திரி காமராசர் யோசனை தெரிவித்தார்.

அவரது இந்த யோசனை குறித்து நேற்று நடைபெற்ற மாநாட்டில் விவாதிக்கப்பட்டு, இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

மாநாட்டில், முதன் மந்திரி காமராசர், மந்திரி பக்தவத்சலம், மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம். பி. காசிமுத்து முதலியோர் கலந்துகொண்டனராம்.

'உண்டி'களைக்கொண்டு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களில் கைத்தறித் துணிகள் வாங்கிக்கொள்ளலாம்.

செய்திச் சுருள்

வண்ணை தமிழ் இளைஞர் கழகம் (சென்னை)

30—5—55ல், சென்னை, வண்ணையம்பதி, ஆண்டியப்பமுதலித் தெருவில் உள்ள மேற்படி கழக நிலையத்தில், தோழர் தி. சு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடந்த உறுப்பினர் கூட்டத்தில், இசையரசு தண்டபாணி தேசிகர் அண்ணாமலை சர்வகலாசாலைக்கு இசைப் பேராசிரியராகவும், உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்தமைக்கும் — சிறந்த நூலை இயற்றிய திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு, இந்தியப் பேரரசின் சார்பாகப் பரிசு வழங்கப்பட்டமைக்கும் மகிழ்ச்சி தெரிவித்தும், அண்ணாமலை சர்வகலாசாலைக்கு துணை வேந்தராக திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டமைக்கு பாராட்டுதல் தெரிவித்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

சொற் பயிற்சி மன்றம்

கும்மிடிப்பூண்டி, மே 30—

29—5—55 மாலை 6 மணியளவில் தோழர் எ. இராதாமணாளன் அவர்கள் தலைமையில் 'தமிழர் 'அன்றும் இன்றும்'என்ற பொருள் பற்றி தோழர்கள் எஸ். ஏ. சேரலாதன், பா. சே. துயமணி, ஆ. கிருஷ்ணன், ஈ. எஸ். மணி ஆகியோர் பேசினர்.

மே தின விழா பொதுக்கூட்டம்

★

புத்திரகவுண்டன் பாளையம்

9—5—55-ல், விழா, அண்ணா மிதிவண்டி நிலையத்தில், தோழர் ஏ. அ. சுப்பு தலைமையில் நடைபெற்றது.

ஆமதாபாத்

29—5—55 மாலை 6 மணிக்கு, திரு. வி. க. அரங்கில், தி. மு. கழகச் சார்பில் மே தின விழாப் பொதுக் கூட்டம், தோழர் க. பொருமான் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நடராசன், தி. சண்முகம், ச. சந்திரன், இரா. வைத்திலிங்கம் ஆகியோர் பேசிய பின், முத்தமிழ் நாடக மன்றத் தோழர்களால், 'யார் நாத்தீகன்' எனும் நாடகம் நடைபெற்றது.

நாகலாபுரம்

30—5—55-ல் தி. மு. கழகச் சார்பில் விழா நடைபெற்றது. அன்று மாலை சுமார் 3000 பேர் கொண்ட ஊர்வலமும், சுதகளி நடனக் கூத்தகளும் நடைபெற்றன. இரவு 7 மணிக்கு, தோழர் கே. எஸ் பொன்னையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பி. தங்கவேலன், இரா. கேசவன் பேசிய பின், மே தினம் கொண்டாட வேண்டியதின் அவசியம்பற்றி அருப்புக் கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி விரிவுரையாற்றினர். அவருக்கு கைத்தறி ஆடை போர்த்தப்பட்டது.

போடிநாயக்கனூர் இளைஞர் தி. மு. க. பொதுக் கூட்டம்

29—5—55 மாலை 4 மணிக்கு சைக்கிள் ஊர்வலமும், இரவு 8½ மணிக்கு பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர் சி. தமிழ் முன்பன் தலைமையில்,மதுரை எஸ். முத்து பேசியபின், தோழர் தில்லை வில்லாளன் 'ஆஸ்திகம் எது? நாஸ்திகம் எது?' என்ற தலைப்பில் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

'நச்சுக் கோப்பை' — நாடகம்

29—5—55ல், நாமக்கல் அடுத்த கல்லிபாளையத்தில் திராவிட மாணவர் கழகத்தாரால், 'நச்சுக் கோப்பை' என்னும் நாடகம், டாக்டர் பி. பிரகாசந் தலைமையில் நடைபெற்றபோது, நாமக்கல் வழக்கறிஞர் தோழர் என். காசியப்பன், தோழர் கே. கருப்பண்ணன் ஆகியோர் சமூக சீருத்த நாடகங்களின் அவசியம் குறித்துப் பேசினர்.

மதுரை மஜீத் நினைவுப் படிப்பக ஆண்டு விழா

29—5—55ல், படிப்பகத்தின் 2-வது ஆண்டு நிறைவுவிழா, மஜீத் திடலில் நடைபெற்றது. கழகக் கொடி ஏற்றுவித்து நகர தி. மு. கழக துணைச் செயலாளர் தோழர் ராஜா பேசினர். தோழர் வி. சு. மணி தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், ச. எமராசன் ஆண்டறிக்கை வாசித்தார்; தோழர்கள் இந்திரஜித்து, பி. எஸ். இராதினம், வசனப்பித்தன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசினர். தூத்துக்குடி தோழர் ஜி. அப்பாசாமி 'மந்திரமா—தந்திரமா' என்ற நிகழ்ச்சியை நடத்திக்காட்டினர். படிப்பகத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 25 மாவட்டச் செயலாளர் வசம் அளிக்கப்பட்டது.

திருமணம்

26—5—55ல், சென்னிமலையில் தோழர் சி. சின்னப்பன்—தோழியர் இராசம்மாள் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு மணமகனால் ரூ. 5 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

கோழிப் பண்ணைகள்

ரூ. 70 லட்சம் செலவில் மத்திய சர்க்கார் செலவிடும்

அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ரூ. 70 லட்சம் செலவில், நாடு முழுவதிலும் 150 கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டத்தை அமுல் செய்ய இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளனராம். அத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முன்பு, பரீட்சார்த்தமாக— உடனடியாக 15 கோழிப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

வெளிநாடுகளிலிருந்து ஏராளமான கோழிக் குஞ்சுகளை இறக்குமதி செய்து, இந்தியாவிலுள்ள சிறந்த பண்ணைகள் சிலவற்றில் அவற்றைச் சில மாதங்கள் வளர்த்து, பின்னர், பல்வேறு மாநிலங்களுக்கும் அவற்றை வினியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

மருத்துவத் துறைக்கு அணுசக்தி

அணுசக்தியை மருத்துவக் காரியங்களுக்குப் பயன்படுத்தும் பணிக்காக உலக சுகாதார நிறுவனத்திற்கு 42,000 டாலர் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 1956-ம் ஆண்டிற்குச் செலவிட அங்கீகரிக்கப்பட்ட 10,20,300 டாலர் நிதியில் இத் தொகையும் அடங்குமாம்.

யூகோ-ரஷியா ஏழாண்டுப் பகை ஒழிந்தது!

மீண்டும் பாசம் வளர்க்க முடிவு!

பெல்கிரேட், ஜூன் 3—

ஏழு ஆண்டுகளாக, ரஷியாவும்—யூகோவும் கொண்டிருந்த பகையை விட்டொழிக்க இரு நாட்டுத் தலைவர்களும் முன்வந்திருக்கின்றனர்.

பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் நெருங்கிய கூட்டுறவு கொள்ளவும், உலக சமாதானத்தை உறுதி செய்ய கூட்டுத் திட்டங்கள் வெளியிடுவதெனவும், உறுதி கூறியிருக்கின்றனர்.

சோவியத் பிரதமர் மார்ஷல் நிகோலாய் புல்கானினும், யூகோ தலைவர் மார்ஷல் டிட்டோவும் இந்த உறுதிமொழிப் பத்திரங்களில் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் நிகிதா குருஷ்சேவ், சோவியத் தூதுக் குழுவிற்குத் தலைமை தாங்கி, கடந்த ஒரு வார காலமாக யூகோ தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

பேச்சுவார்த்தைகளினால் விளைந்த பலன்களில் குறிப்பிடத்தகுந்தது — இரு நாடுகளிலும் உள்ள மற்ற நாட்டின் குடிமக்களை, மனிதாபிமான அடிப்படையில் திரும்ப அவரவர் நாட்டிற்கு அனுப்பி வைப்பது என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான்.

அணுசக்தியை சமாதான காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கான அபிவிருத்தியில் இரு நாடுகளும் ஒத்துழைப்பதென முடிவு செய்திருக்கிறார்கள்.

மேலும், இருநாடுகளின் சமூக இயக்கங்களின் மூலம் தொடர்பு கொள்ளவும் முடிவு செய்தனர் என்று தெரிகிறது.

உலக விவகாரங்களைப் பொறுத்தவரையில், இருநாடுத் தலைவர்களும் அணு ஆயுதங்களைத் தடைசெய்ய வேண்டும் என்றும், ஆயுதபரிகரணம் செய்ய வேண்டும் என்றும், கம்யூனிஸ்டு சீனாவிற்கு ஐ. நா. சபையில் இடம் வேண்டும் என்றும் கோரியிருக்கின்றனர்.

பார்மோசா பிரச்சினையில், சீனாவின் நியாயமான உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஜெர்மன் பிரச்சினைக்கு பொது பாதுகாப்பையும், ஜெர்மன் மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு பரிகாரம் காண வேண்டும் என்றும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

பாண்டுங் மாநாட்டு முடிவுகளை இரு நாட்டவரும் வரவேற்பதாகக் கூறினர்.

கவலையுறுகின்றனராம்!

பார்மோசா மீது, மக்கள் சீனாவுக்கு நியாயமான உரிமைகள் இருப்பதாக யூகோ ஒப்புக்கொண்டதினால், வாஷிங்டனில் கவலை நிலவுவதாகத் தெரிகிறது.

டிட்டோவின் பிரகடனத்தின் காரணமாக, யூகோவுக்குக் கொடுக்கப்படவிருக்கும் உதவித் தொகை குறைந்துவிடலாமெனவும் கருத்து நிலவுகிறதாம்.

பிரிட்டன் இரயில்வே வேலை நிறுத்தம்

நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்குச் சீட்டு?

லண்டன், ஜூன் 3—

பிரிட்டனில் நடைபெற்றுவரும் இரயில்வே வேலை நிறுத்தம், நாட்டின் தொழில்கள் பலவற்றை ஏற்கனவே பாதிக்கத் தொடங்கிவிட்டது.

இன்று நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு 'வேலை கிடையாது' என்ற நோட்டீஸ் தரப்பட்டதாகவும், இன்னும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வரும் வாரத்தில், அதிக நேர வேலை ரத்து செய்யப்பட்டிருப்பதால், வாராந்திரக் கூலி மிகவும் குறைந்துவிடும் என்று தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

ரூ. 10 லட்சம் செலவில் ஆல்வாயில் தொழிற்சாலை

எர்ணகுளம், ஜூன் 4—

சிந்திரி இரசாயன உரத் தொழிற்சாலைக்கு அடுத்தபடியாக ரூ. 10-லட்சம் செலவில், அம்மோனியம் குளோரைட் தொழிற்சாலை திரு—கொச்சியிலுள்ள ஆல்வாயில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது; அத்தொழிற்சாலையை திரு—கொச்சி முதலமைச்சரால் இன்று திறந்துவைக்கப்பட்டது.

'அனல் அலை'க்கு ஐவர் பலி!

[illegible] பிணமாகக் கிடந்த பரிதாபச் சம்பவம்

[illegible] வட்டத்திலுள்ள சாப்ரா [illegible] அருகில், புதிதாகத் திருமணமான மணமகளும், பல்லக்கைச் சுமந்து வந்த 4 வேலையாட்களும் வெய்யிலின் 'வெப்ப அலை'யைத் தாங்க முடியாமல் மரணமடைந்து விட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

அக்குழுவினர், மணமகனின் இல்லத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர்; பகல் முழுவதும் கடும் வெய்யிலும், அனல் காற்றும் வீசிக்கொண்டிருந்தது; எனவே, இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தடியில் அவர்கள் தங்கினர்; ஆனால், மாலையில், அந்த ஐவரும் பிணமாகக் கிடந்த பரிதாபச் சம்பவத்தை அருகிலுள்ள கிராம வாசிகள் கண்டறிந்து, தகவல் தெரிவித்தனர்—என்றும் விவரங்கள் தரப்பட்டுள்ளது.

மேலோக எண்ணம் விடுத்து பூலோகம் திரும்பும் சாதுக்கள்!

உழைத்து வாழ முடியுமா என்பதறிய மாநாடு கூட்டுகிறர்களாம்!

ராஜ்கோட், ஜூன் 4—

'மோட்சமே எங்கள் ஏக லட்சியம்' என்று கூறிக்கிடந்த சாதுக்கள், இப்போது மேலுலக எண்ணத்தை விடுத்து, பூலோகத்தில், இந்தியாவின் முன்னேற்றத்திற்காக ஏதேனும் செய்ய முடியுமா என்ற எண்ணம் கொண்டிருக்கிறர்கள் என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

ஆசிரமத்தில் ஜெபமாலை உருட்டிக்கொண்டிருந்த கரங்களால் மண்வெட்டியும், கோடரியும் தூக்கி வேலை செய்ய முடியுமா என்பது பற்றி விவாதிக்க, ஜூனாகத்தில், மாநாடு ஒன்றில் அந்த சாதுக்கள் கூடியுள்ளனர்.

ஆசிரமங்களில் வசித்துவரும் சாமியார்கள் மட்டுமே இந்த மாநாட்டில் பங்கு பெறுவர் என்றும், 'அன்னக்காவடி தருமந் தாயே'க்கள், வழக்கம்போல தெரு வீதிகளில் தங்களின் தொழிலை மேற்கொண்டிருப்பர் என்றும் கூறப்படுகிறது.

****

தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

5—6—55 ஞாயிறு காலை 9 மணிக்கு
சென்னை, கோகலே மண்டபத்தில்

தோழர் கே. ஆர். இராமசாமி தலைமையில்

தோழர் ஈ. வெ. கி. சம்பத்

'மக்களும்-ஆட்சியும்' என்னும் பொருள் பற்றி
சொற்பொழிவாற்றுவார்

நன்கொடை : ரூ. 1—0—0 அணா 0—8—0

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

****

கிழக்கு வங்கத்தில் 'ஜனநாயக ஆட்சி' மீட்கப்படுகிறது!

கவர்னர் ஆட்சியை ஒழிப்பதாக பாக். பிரதமர் அறிவிப்பு

பஸ்லுல் ஹக்கின் பிரதிநிதி மந்திரிசபை அமைப்பார்

கிழக்கு வங்கத்தில், கவர்னர் ஆட்சியை அகற்றிவிட்டு' ஜனநாயக ஆட்சி முறையை மீண்டும் உடனடியாக அமுல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய காலம் நெருங்கிவிட்டதென்றும், பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ளார்.

உடனடியாக ஒரு அமைச்சரவை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், பஸ்லுல் ஹக் நியமிக்கும் ஒருவரே அந்த மந்திரிசபைக்குத் தலைவராக இருப்பாரென்றும் அவர் குறிப்பிட்டார்.

முக்கியமான அலுவல்கள் பலவற்றில் ஈடுபட வேண்டியிருப்பதால், பஸ்லுல் ஹக், மந்திரிசபையில் சேர மாட்டாரென்றும் கூறப்பட்டுள்ளது.

S.P.T.

SANKARAN PROGRESSIVE TUTORIALS · TIRUCHI

SANKARAN PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P.O., TIRUCHIRAPALLI.

RE-OPENS : 10th JUNE 1955

S. S. L. C., INTER., B. A., etc.,
(All Parts & Groups)

★

The Greatest Living Poet
BHARTHI DASAN
will Teach you Tamil!

★

Mrs. JUDITH LOUIS, B.A. (HONS) Vice-Principal.

N. J. DEVADOSS, M.A., Principal.

கழகக் கூட்டங்கள்

★

தேவகோட்டை
6—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: குரு. இதயமணி
பேசுவோர்:
கண்ணதாசன்
எஸ். முத்து
கே. சந்தானம்
முத்துராமன்

★

கூவசம்பட்டு
அழகிரி மைதானத்தில்
7—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஜி. சந்திரம்
பேசுவோர்:
ஈ. வெ. கி சம்பத்
போளூர் சுப்பிரமணியம்
முல்லை-சத்தி

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

★

ஜூன் 6: திருவிடமருதூர்
7: காட்டுச்சேரி
8: கொண்டல்
9: முத்துப்பேட்டை
10: மேலவாழக்கரை
காலை : திருமணம்
மாலை:பொதுக்கூட்டம்
12: கடலூர்
14: கொடுங்கையூர்
[சென்னை மூலக்கடை வட்டம்]

குமாஸ்தா வேலைக்கு பி. ஏ., எம். ஏ.,-க்கள் போட்டி

ஆரம்பச் சம்பளம் ரூ. 55—
3 இடங்களுக்கு 2,000 மனுக்கள்

"கல்கத்தா சர்வ கலாசாலையில், குமாஸ்தா வேலைக்கு, ரூ. 55 ஆரம்பச் சம்பளத்தில், 'மெட்ரிகுலேஷன்' படித்த 3 பேர் தேவை" என்று விளம்பரம் செய்யப்பட்டது; 2,000-த்திற்கும் அதிகமான மனுக்கள் உடனே குவிந்தனவாம்!

பல பி. ஏ., பெண் பட்டதாரிகளும், எம். ஏ.,-க்களும் அந்த வேலைக்கு மனு போட்டிருப்பதாகவும் தெரிகிறது.

அமெரிக்காவை போல் இந்தியாவா?

"இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்குள், அமெரிக்காவைப்போன்று இந்தியாவும் முன்னேற்றமடைந்த நாடாகி விடும்," என்று திட்டக் குழு ஆலோசகர் எஸ். வி. இராமமூர்த்தி கூறியுள்ளார்.

அறிவிப்பு

'நம் நாடு' தின இதழில் வெளியிடும் செய்திகளை ஆசிரியர் முகவரிக்கும், 'நம் நாடு' இதழுக்கு நன்கொடை, எஜெண்டு டிபாசிட் தொகையில் பாக்கித் தொகை, சந்தாவுக்காக அனுப்பப்படும் செக், டிராப்டு, போஸ்டல் ஆர்டர், மணியார்டர் ஆகியவைகளை "பொறுப்பாளர் (மானேஜர்), 'நம் நாடு'" என்ற முகவரிக்கும் எழுதி அனுப்ப வேண்டுகின்றோம். தனிப்பட்டவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு செக், டிராப்டு, மணியார்டர் ஆகியவைகளை அனுப்பாதிருக்க வேண்டுகின்றோம்.

தி. மு. க. தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் கடிதங்கள், மணியார்டர் முதலியவைகளை பொதுச் செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

—பொறுப்பாளர்,
'நம் நாடு'

சேலம் நகர தி. மு. கழக பொது உறுப்பினர் கட்கு

5—6—55 காலை 9½ மணிக்கு, சித்தேஸ்வரா சினிமா கொட்டகைக்கு எதிரில் உள்ள கழகத் தோழர் வீட்டில், சேலம் நகர தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும் அதுசமயம் மாநில மாநாட்டு நிதி கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

உறையூர் தி. மு. கழக பொது உறுப்பினர்கட்கு

6—6—55 மாலை 7 மணிக்கு, உறையூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அது போது, மாநில மாநாட்டு நிதி வசூல், கூட்ட வரவு-செலவு ஆகியவை பற்றி ஆராயப்படும்.

நண்பன் படிப்பக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

6—6—55 மாலை 6 மணிக்கு, வேலூர், வேலப்பாடி, கழனி காட்டு வீதியில், தோழர் சே மு. கோபால் எம். சி., தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கு. மு. அண்ணல் தங்கோ, ஏ. கே. தண்டபாணி, எம். பி. சோவிந்தசாமி எம் சி., வி. எம். புருஷோத்தமன் ஆகியோர் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.